## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண்.377/2016

இன்று 2025 ம் ஆண்டு ஜுன் திங்கள் 18 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜோயல் ரிச்சர்டு | தொழில் | : ஓட்டுனர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : லீனஸ் | கிராமம் | : திருப்பூர் |
| வயது | : 50 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 18-06-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. தாவாச் சொத்து ஆதியில் திம்மபோயன் என்பவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். திம்மபோயனுக்கு பெத்தபோயன், பழனி போயன், நாயுண்ட போயன் ஆகியோர் மட்டும் தான் வாரிசுகள் என்றால் சரிதான். நாயுண்ட போயனுக்கு செல்லபோயன், பழனி போயன் ஆகியோர் தான் வாரிசுகள் என்றால் சரிதான். பழனி போயனுக்கு அய்யாவு போயன், பெத்தபோயன், திம்மபோயன், ராமபோயன் மற்றும் சேமலை போயன் ஆகியோர் தான் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. மேற்படி திம்ம போயன் மகன் பெத்த போயனுக்கு பழனி போயன், மார போயன் ஆகியோர் தான் வாரிசுகள் என்றால் சரிதான். மார போயனுக்கு பழனி போயன், செல்லபோயன் ஆகியோர் வாரிசுகள் என்றால் தெரியவில்லை.

3. மேற்படி திம்ம போயன் மகன் பழனி போயனுக்கு பெத்தபோயன், மாரபோயன், உத்தாண்டி போயன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் தெரியவில்லை. பழனி போயன் மகன் பெத்தபோயனுக்கு T.P.பழனிச்சாமி, T.P.ராமசாமி,

T.P.கிருஷ்ணசாமி மற்றும் ஒரு தத்து மகன் பெத்தபோயன் ஆகியோர் வாரிசுகள் என்றால் தெரியவில்லை. மேற்படி T.P.ராமசாமியின் மகன் தான் 9ம் பிரதிவாதி வெங்கடேஷ் என்றால் சரிதான்.

4. மேற்படி திம்ம போயன் மகன் பழனி போயனின் மகன் மார போயனுக்கு பெத்தபோயன் மற்றும் ராஜு என்கிற பழனி போயன் ஆகிய இருவர் தான் வாரிசுகள் என்றால் தெரியவில்லை. மேற்சொன்ன பெத்தபோயன் தான் பழனி போயன் மகன் பெத்தபோயனுக்கு தத்து மகன் என்றால் தெரியவில்லை. க.ச.749 சொத்தின் மொத்த விஸ்தீரணம் 5.65 ஏக்கர் என்றால் சரிதான். அந்த சொத்தில் திம்ம போயன் மகன் மூவருக்கும் தலா 3ல் 1 பங்கு பாத்தியம் என்றால் சரிதான்.

5. திம்மபோயனின் 2வது மகன் பெத்த போயனின் வாரிசுகள் கடந்த 01.10.1889ம் தேதி அவர்களுக்கு பாத்தியப்பட்ட 3ல் 1 பங்கை நாயுண்ட போயன் மகன் பழனி போயனுக்கு கிரயம் செய்து விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.